# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
# Communication & Media Studies

## புதிய பாடத்திட்டம்
## 12 ஆம் தரங்களுக்குரியது.

(2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கானது.)

சிங்கள மொழித் துறை
தேசிய கல்வி நிறுவனம்
மஹரகம
இலங்கை
www.nie.lk

**மேற்பார்வை:**

பேராசிரியர் குணபால நாணயக்கார, முன்நாள் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

(கலாநிதி (திருமதி) டீ. ஏ. ஆர். ஜே. குணசேகர) பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

பீ. சனத் பூஜித பிரதிப் பணிப்பாளர் நாயகம், ஆய்வு மற்றும் திட்டமிடல் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**பாட நிபுணத்துவ ஆலோசனை:**

பேராசிரியர் விமல் திசாநாயக்க, ஹவாய் பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா.

**பாடத்திட்ட வளவாளர்கள் குழு:**

பேராசிரியர் ஆரியரத்ன எதுகல, வெகுசன தொடர்பாடற் கற்கைகள் துறை, களனிப்பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சமந்த ஹேரத், பகுதித் தலைவர், வெகுசன தொடர்பாடற் கற்கைகள் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்.

கலாநிதி எட்வின் ஆரியதாச, சிரேஷ்ட ஊடகவியற் ஆலோசகர்.

**உசாத்துணை ஆலோசனை**

திருமதி. மணிக்கே ஜயசேன, பணிப்பாளர் (மொழிகள், மானிடவியற் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்) கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல.

**எழுத்தாளர் குழு:**

திரு. டி. எம். கே. பி. திசாநாயக்க, எம். ஏ. பின்னவெல தேசிய பாடசாலை, ரம்புக்கனை

திருமதி குமுதி பீ. விஜயசேகர, எம். ஏ. ஸ்ரீமாவோ பண்டார நாயக்க மகளிர் கல்லூரி, கொழும்பு - 7.

திருமதி. எம். கயத்திரி நதீகா, பிந்து எம். ஏ. கிளிப்டன் மகளிர் கல்லூரி, மருதானை, கொழும்பு - 9.

திரு. கே. எச். சி. மனோஜ் ஹேவகே, பி. ஏ. வோருபெந்தி வேவ மத்திய மகா வித்தியாலயம், அராவத்த மஹியங்கனை.

திருமதி. எம். பீ. பி. உபமாலிக்கா, பி. ஏ. டி. எஸ் சேனநாயக்க கல்லூரி, கொழும்பு - 8.

திருமதி. எச். சி. தில்காணி த சில்வா, பி. ஏ. ராஜசிங்க தேசிய கல்லூரி, ருவன்வெல்ல.

**வழிநடத்தலும் இணைப்பும்:**

செல்வி. ருவனி குணவர்த்தன, எம். ஏ. சிரேஷ்ட விரிவுரையாளர், சிங்கள மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

## அறிமுகம்

உலகம் விரைவாக மாற்றங்களுக்கு உள்ளாகின்றது. இவ்வாறு மாற்றத்திற்குள்ளாகும் உலகை அறிந்துகொள்ள வேண்டுமாயின் உலக சமூக அறிவைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவதற்கு வழிகாட்ட வேண்டும். இதற்குரிய பல்வேறு கண்ணோட்டங்களை அறிந்துகொள்ள வேண்டும். இதற்குத் தொடர்பாடல் அத்தியாவசியமான சமூக அறிவியல்களில் ஒன்றாகும்.

நவீன கற்றல் புலனொன்றாக மாத்திரமல்லாது சித்தாந்த அடிப்படையுடன் கூடிய பாடப்பரப்பொன்றான தொடர்பாடலும் ஊடகக் கற்கையுமான பாடப்புலனைப் புதிய உலகைப்பற்றி விளங்கிக் கொள்வதற்காகப் பிள்ளைகளை வழிகாட்டுவதற்குப் பயன்படுத்த முடியும்.

தொடர்பாடல் என்பது சகல அறிவியல்களுடனும் அர்த்தமுள்ள இடைத்தொடர்புகளுடைய கற்கை நெறியொன்றாகும்.

ஆகவே, க.பொ.த உயர் தர பரீட்சையின் பின் சமூகத்திற்கு நுழையும் பிள்ளைக்கு தொடர்பாடலும் ஊடகக் கற்கை எனும் பாடம் மூலம் புலனுணர்வு, மனவெழுச்சி, உள இயக்க இயலுமைகளை மேம்படுத்திக் கொண்டு தீர்மானமிக்க தொடர்பாடலாளராக, விமர்சனத்துடன் கூடிய பெறுநராக, தொடர்பாடல் ஆய்வாளராக மாறுவதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொண்டு அதற்குத் தேவையான கற்றல் பேறுகளை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் இந்தப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், சனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆராய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் பேணக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியையூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம்: தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

   எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

   எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

   சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

   தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ஐஊவு) பயன்படுத்தல்.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினையை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

   இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

   சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

   உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு

   பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரினக் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

   அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் பேணுவதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

   பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. □கற்றலுக்குக் கற்றல்□ தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

**பாடக் குறிக்கோள்கள்:**

1. தொடர்பாடலின் சித்தாந்த மற்றும் நடைமுறை அடிப்படைபளை விளங்கிக் கொள்ளல்.
2. வெகுஜன ஊடகத்திற்கும் கலாச்சாரத்திற்கும் இடையில் இருக்கும் இடைத்தொடர்பை விபரித்தல்.
3. வெகுஜன ஊடகம் மக்கள் கருத்துக்களைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகின்ற விதத்தை விளங்கிக் கொள்ளல்.
4. தனித்துவமான தொடர்பாடல் திறன்களை அறிந்து கொண்டு படைப்பாக்கத்துடன் கூடிய தொடர்பாடலாளராவதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளல.
5. தகவல் கட்டங்களைப் பற்றி விளக்கத்துடன் செயலாற்றுதல்.
6. விமர்சனத்துடன் கூடிய பெறுநராகவும் தொடர்பாடல் ஆய்வாளராகவும் செயலாற்றுவதற்குத் தேவையான தேர்ச்சிகளை மேம்படுத்திக் கொள்ளல்.

க.பொ.த. உயர் தர 12 ஆம் 13 ஆம் வகுப்புகளுக்கான தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் புதிய பாடத்திட்டம்– 2017 முதல் அமுலாக்கப் படுவதற்கானது. 12 ஆம் தரத்திற்கான பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0 தொடர்பாடல் எண்ணக்கரு, தொடர்பாடல் சமூகத்தில் காணப்படும் விதம், தொடர்பாடல் கற்கை முறைவழியும் அதன் பல்வேறு அணுகல்களையும் அறிந்து கொள்வதுடன் தொடர்பாடல் விஞ்ஞானம் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.** | 1.1 தொடர்பாடல் விஞ்ஞானக் கற்கைக்கான தொடர்பாடல் எண்ணக்கருவிற்குறிய வரைவிலக்கணத்தைத் தெளிவு படுத்தி மிருக தொடர்பாடலை எடுத்துக் காட்டி ஒப்பீட்டளவில் மனித தொடர்பாடலின் இணையற்ற தன்மையை விளக்குவார். | **1.0 தொடர்பாடல், சனசமூக மற்றும் தொடர்பாடல் கற்கை**<br><br>**1.1 தொடர்பாடலை அறிந்து கொள்ளல்**<br>1. தொடர்பாடல் எண்ணக்கரு: வரலாற்று முக்கியத்துவம் மற்றும் பிரயோக வரையறை<br>2. தொடர்பாடல் பற்றிய அடிப்படை வரையிலக்கணங்கள் (லஸ்வெல், வில்பர் ஸ்ராம், சால்ஸ் குலீ)<br>3. மிருக தொடர்பாடலும் அதன் சிறப்பியல்புகளும்<br>4. மனித தொடர்பாடல்: ஒப்பிட முடியாததும் சக்திமிக்கதும் | 1. தொடர்பாடல் எண்ணக்கருவில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் பிரயோக வரையறை என்பவற்றை விபரிப்பார்.<br>2. தொடர்பாடல் பற்றிய அடிப்படைச் சொல்பொருள் விளக்கங்களை (லஸ்வெல், வில்பர் ஸ்ராம், சால்ஸ் குலீ) பழக்கப்படுத்திக் கொள்வார்.<br>3. மிருக தொடர்பாடலின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுவார்.<br>4. மனித தொடர்பாடலின் இணையற்ற தன்மையைக் காரணங்காட்டி விளக்குவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.2 உயிரியல் விஞ்ஞான மற்றும் மனித இயல் விஞ்ஞான அணுகுமுறைகள் ஊடாக மனித பரிணாமத்தில் தொடர்பாடல் இடம்பெற்ற விதம் பற்றி விளக்குவார். | **1.2 தொடர்பாடலும் சமூகமும்**<br>1. தனிநபரும் சமூகமும்: உயிரியல் விஞ்ஞான மற்றும் மனித இயல் விஞ்ஞான அணுகுமுறைகள்<br>2. மனித பரிணாமமும் தொடர்பாடலும்<br>3. தொடர்பாடலும் சமூகமயமாக்கலும்<br>4. தொடர்பாடலின் அவசியம், சக்திமிக்க தன்மை, நவீன சமூகம் | 1. உயிரியல் விஞ்ஞான மற்றும் மனித இயல் விஞ்ஞான அணுகுமுறைகளை விசாரிப்பார்.<br>2. மனித பரிணாமமெனும் முறைவழியில் தொடர்பாடல் மேற்கொள்ளப்பட்ட விதத்தைக் கலந்துரையாடுவார்.<br>3. சமூகமயமாக்கல் முறைவழியின் போது தொடர்பாடலின் முக்கியத்துவத்தைக் கண்டறிவார்.<br>4. நவீன சமூகத்தில் தொடர்பாடலின் சக்தி ஆற்றலை விளக்குவார்.<br>5. நவீன சமூகத்தில் தொடர்பாடல் அத்தியாவசிய கருவியொன்றாக விருத்தியடைந்துள்ளமையைப் பகுப்பாய்வார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.3 வெகுஜன ஊடக தோற்றத்தை அச்சு மற்றும் இரத்திரனியல் ஊடகங்களைக் கொண்டு அதன் வளர்ச்சி, தொடர்பாடலில் நவீனநிலை, சிக்சல்நிலை மற்றும் பரவலடைதல் போன்றவை பற்றித் தெளிவு பெறுவார். | **1.3 தொடர்பாடல், வெகுஜன ஊடகத் தோற்றமும் வளர்ச்சியும்**<br>1. வெகுஜன ஊடகத் தோற்றம்: வரலாற்றுப் பின்னணி<br>2. காலக்கிரமமான வளர்ச்சியும் முக்கிய நிகழ்வுகளும் - அச்சு ஊடகம்<br>3. காலக்கிரமமான வளர்ச்சியும் முக்கிய நிகழ்வுகளும் - இரத்திரனியல் ஊடகம்<br>4. தொடர்பாடலின் நவீனநிலை, சிக்கல்நிலை மற்றும் பரவலடைதல் | 1. வெகுஜன ஊடக தோற்றத்தின் வரலாற்று முக்கியத்துவ பின்னணியை விபரிப்பார்.<br>2. அச்சு ஊடகத்தின் காலக்கிரமமான வளர்ச்சியைத் தெளிவு படுத்துவார்.<br>3. இலத்திரனியல் ஊடகத்தின் காலக்கிரமமான வளர்ச்சியைத் தெளிவு படுத்துவார்.<br>4. தொடர்பாடலின் நவீனநிலை, சிக்கல்நிலை மற்றும் பரவலடைதல் போன்றவற்றைத் தெளிவு படுத்துவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **1.4** தொடர்பாடல் கற்கையின் பின்னணி, பன்முக புலன்களுக்கிடையிலான ஒழுங்குமுறைகளை இனங்கண்டு சமூக சாஸ்திரமொன்றாகத் தொடர்பாடலின் விருத்திக்கு முன்னோடியான நபர்களையும் அவர்களின் செயல் திறன்களையும் விபரிப்பார். | **1.4 தொடர்பாடல் கற்கை**<br>1. தொடர்பாடல் கற்கையின் பின்னணி<br>2. தொடர்பாடல் கற்கை புலன்களுக்கிடையிலான ஒழுங்குவிதிகள்<br>3. சமூக *சாஸ்திரமொன்றாக* அறிவியல் ஒன்றாக தொடர்பாடல்<br>4. முன்னோடிகளும் பணிகளும் (லஸ்வெல், லபாஸய பெல்ட், லெவின், ஹவுலன்ட், ஸ்ராம்). | 1. தொடர்பாடல் கற்கையின் பின்னணியை விபரிப்பார்.<br>2. தொடர்பாடல் கற்கை புலன்களுக்கிடையிலான ஒழுங்குவிதிகளின் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>3. சமூக *சாஸ்திரமொன்றாக* அறிவியல் ஒன்றாக தொடர்பாடலிலுள்ள முக்கியத்துவத்தைக் கற்பார்.<br>4. தொடர்பாடல் கற்கை செய்முறைக்காக முன்னோடி நபர்கள் (லஸ்வெல், லபாஸய பெல்ட், லெவின், ஹவுலன்ட், ஸ்ராம்) இதற்கு வழங்கிய பங்களிப்பைக் காட்டித் தருவார். | 12<br><br>44 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 தொடர்பாடலின் அடிப்படைச் தொழிற்பாடுகள், அதன் கோட்பாட்டுப் பின்னணி மற்றும் பன்முகக் கண்ணோட்டம் என்பவற்றை அறிந்து, தொடர்பாடலானது மனித தேவையொன்றே என்பதை விளங்கிச் சந்தர்ப்பத்திற்கேற்ப அதனைத் தன் வாழ்க்கையில் பயன் படுத்துவார் . | | **2.0** தொடர்பாடல் : செயல், கோட்பாடு மற்றும் சரியான கண்ணோட்டம் | | |
| | **2.1** தொடர்பாடலின் பயன்பாட்டையும் மனித மற்றும் சமூக தேவையொன்றாகச் செயல்படும் விதத்தையும் அதன் மூலம் சர்வதேச தொடர்புகள் விருத்தியடையும் விதத்தையும் விபரிப்பார். | 2.1 தொடர்பாடலின் பயன்பாடு<br>1. தொடர்பாடலானது மனிதனின் அடிப்படைத் தேவையொன்று என<br>2. தொடர்பாடலானது சமூக தேவையொன்று என<br>3. அரசு, பொதுமக்கள் மற்றும் தொடர்பாடல்<br>4. தொடர்பாடலும் சர்வதேச தொடர்புகளும் | 1. அடிப்படை மனிதத் தேவையொன்றாகத் தொடர்பாடலின் பயன்பாட்டை விளக்குவார்.<br>2. சமூக தேவையொன்றாகத் தொடர்பாடல் பயன்படுத்தப்படும் விதத்தை விளக்குவார்.<br>3. அரசு, பொதுமக்கள் மற்றும் தொடர்பாடல் என்பவற்றிற்கிடையில் காணப்படுகின்ற தொடர்பு முறையையும் அதன் வரையறையையும் தெளிவு படுத்துவார்.<br>4. சர்வதேச தொடர்புகளைப் பேணுவதற்குத் தொடர்பாடல் துணைபுரியும் விதத்தை விளக்குவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **2.2** தொடர்பாடலின் அடிப்படைச் செயல்களை அறிந்து நவீன வெகுஜன ஊடகச் செயல்பாடுகளுக்கு அதனைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தக் கூடிய விதத்தை விபரிப்பார். | **2.2 தொடர்பாடல் செயல்கள்**<br>1. தொடர்பாடலின் குறிக்கோள்கள்<br>2. தொடர்பாடல் தொழிற்பாடுகளை அறிந்து கொள்ளல<br>3. தொடர்பாடல் செயல்களும் நவீன வெகுஜன ஊடகச் செயற்பாடுகளும்<br>4. தொடர்பாடல் செயல்களும் சமூக இயக்கங்களும் | 1. தொடர்பாடலின் அடிப்படைக் குறிக்கோள்களை விளக்குவார்.<br>2. தொடர்பாடல் செயல்களை அறிமுகப் படுத்துவார்.<br>3. தொடர்பாடல் செயல்களைச் செய்து கொள்வதற்கு வெகுஜன ஊடகங்கள் பயன்படும் விதத்தை விளக்குவார்.<br>4. சமூக இயல்புநிலை பேணப்படுவதற்குத் தொடர்பாடல் செயல்கள் உதவுகின்ற விதத்தைப் பகுப்பாய்வு செய்வார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **2.3** தொடர்பாடலின் கோட்பாட்டைக் கட்டியெழுப்பல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றைப் பகுப்பாய்வு செய்வார். | **2.3 தொடர்பாடல் கற்கையின் கோட்பாட்டுப் பின்னணி**<br>1. கோட்பாடு மற்றும் கோட்பாட்டைக் கட்டியெழுப்பல்<br>2. தொடர்பாடல் கோட்பாட்டை அறிந்து கொள்ளல்<br>3. தொடர்பாடல்: ஆரம்பகாலக் கோட்பாடு<br>4. தொடர்பாடலில் கோட்பாட்டு ரீதியான அபிவிருத்தி (லஸ்வெல், ஹவுலன்ட், லெவின், ஸ்ராம், கர்ப்னர்) | 1. கோட்பாடு மற்றும் கோட்பாட்டைக் கட்டியெழுப்பல் பற்றிய எண்ணக்கரு அடிப்படையை விளக்குவார்.<br>2. தொடர்பாடல் கோட்பாட்டில் காணப்படுகின்ற விசேட தன்மைகளை விளக்குவார்.<br>3. தொடர்பாடலின் ஆரம்ப கால கோட்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>4. தொடர்பாடலில் கோட்பாட்டு ரீதியாக அபிவிருத்தி ஏற்பட்ட விதத்தைப் பகுப்பாய்வார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **2.4** தொடர்பாடல் கற்றலில் பன்முகக் கண்ணோட்டங்கள், உள்ளடக்கங்கள், அவற்றின் வேறுபாடுகள் என்பவற்றை ஒப்பிட்டு அறிந்து கொள்வார். | **2.4 தொடர்பாடல் கற்கைப் பன்முகக் கண்ணோட்டம்**<br>1. செயல்சார்ந்ததும் அனுபவ பூர்வமானதுமான கண்ணோட்டம் (Functional and Empirical perspective)<br>2. பொருள் விளக்கமும் ஊடாடலுடன் கூடிய கண்ணோட்டமும் (Interpritative and Interactive)<br>3. ஆக்கபூர்வமானதும் விமர்சன ரீதியானதும் (Creative and Critical)<br>4. நவீன மற்றும் நவீனத்திற்கு பிந்திய (Modern and Post modern) | 1. nj hl ப்பாடல் கற்றலில் பன்முகக் கண்ணோட்டம் மற்றும் அவற்றை அறிந்து கொள்ளல் என்பவற்றின் முக்கியத்துவத்தைத் தெளிவு படுத்துவார்.<br>2. செயல்சார் கண்ணோட்டம் மற்றும் அனுபவரீதியான கண்ணோட்டம் என்பவற்றின் தன்மைகளை விளக்குவார்.<br>3. தொடர்பாடல் கற்றலிற்கான அர்த்த நிருபணத்துடனும் செயற்பாட்டுடனும் கூடிய கண்ணோட்டங்களை விபரிப்பார்.<br>4. ஆக்கத்திறனுள்ள விமர்சனக் கண்ணோட்டங்கள் தொடர்பாடலுக்கு முக்கியத்துவம் பெறும் விதத்தைக் காட்டுவார்.<br>5. நவீன மற்றும் பின் நவீன கண்ணோட்டங்கள் தொடர்பாடல் கற்கைக்கு முக்கியத்துவம் பெறும் விதத்தைக் காட்டுவார். | 12 |
| | | | | **42** |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **3.0 தொடர்பாடல் மாதிரிகள், அடிப்படைத் தன்மைகள், பிரிவுகள் என்பவற்றைத் தனித்தனியாக இனங்கண்டு தொடர்பாடல் மற்றும் வெகுசன ஊடகம் என்பவற்றிற்கிடையில் காணப்படும் தொடர்புகளை அறிந்து தொடர்பாடல் செயல்முறை பற்றிய சரியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.** | **3.1** தொடர்பாடல் செயல்முறைகளின் அடிப்படைக் கூறுகள், தன்மைகள் என்பவற்றை விளக்குவார். | **3.0 தொடர்பாடல் செயல்முறை: அடிப்படை எண்ணக்கரு, மாதிரிகள் மற்றும் வகைப்படுத்தல்**<br><br>**3.1 தொடர்பாடல் செயல்முறையொன்றாக**<br>1. தொடர்பாடல் செயல்முறை: அடிப்படைக் கூறுகள்<br>2. தொடர்பாடல் செயல்முறையின் இயல்புநிலையை அறிந்து கொள்ளல்<br>3. தொடர்பாடல் இடையூறுகளும் பின்னூட்டங்களும்<br>4. செயற்றிறனுள்ள தொடர்பாடல் | 1. தொடர்பாடல் செயல்முறைகளின் அடிப்படைக் கூறுகளை அறிந்து கொள்வார்.<br>2. தொடர்பாடல் செயல்முறைகளின் தன்மைகளை விளக்குவார்.<br>3. தொடர்பாடல் செயல்முறைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய முறைவழிகளைக் காண்பிப்பார்.<br>4. தொடர்பாடல் முறைவழியுடன் தொடர்புடைய இடையூறுகள் மற்றும் பின்னூட்டல்கள் என்பவற்றின் கருத்துகளைத் தெளிவுபடுத்துவார்.<br>5. செயற்றிறனுள்ள தொடர்பாடலின் தன்மையையும் தேவையினையும் விளக்குவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **3.2** தொடர்பாடல் பற்றிய அடிப்படை மாதிரிகள் சிலவற்றின் ஊடாகத் தொடர்பாடல் முறைவழியை விபரிப்பார். | **3.2 அடிப்படைத் தொடர்பாடல் மாதிரிகள்**<br>1. மாதிரிகள் தொடர்பான எண்ணக்கரு<br>2. மாதிரிகளின பயன்பாடும் முக்கியத்துவமும்<br>3. தொடர்பாடல் மாதிரிகளை அறிந்து கொள்ளல்<br>4. அடிப்படைத் தொடர்பாடல் மாதிரிகள் (லஸ்வெல், ஹவுலன்ட், லெவின், ஸ்ராம், கர்ப்னர்) | 1. மாதிரிகள் பற்றிய என்னக்கருவை விபரிப்பார்.<br>2. மாதிரிகளின் பயன்பாட்டையும் முக்கியத்துவத்தையும் காட்டித் தருவார்.<br>3. தொடர்பாடல் மாதிரிகள் என்பதை விபரிப்பார்.<br>4. அடிப்படைத் தொடர்பாடல் மாதிரிகளை விளக்குவார். | 10 |

Grade 13 - Syllabus

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3 தொடர்பாடல் தன்மைகள், அடிப்படைப் பிரிவுகள் என்பவற்றை ஒப்பிட்டு விளக்குவார். | **3.3 தொடர்பாடல் அமைவுகளும் அடிப்படைப் பிரிவுகளும்**<br>1. வாய்மொழியிலான தொடர்பாடல்<br>2. அடிப்படைப் பிரிவுகள்: தனிநபருக்குள்ளான தொடர்பாடலும் நபர்களுக்கிடையிலான தொடர்பாடலும்<br>3. கூட்டு மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல்<br>4. வெகுஜன தொடர்பாடல் | 1. தொடர்பாடல் தன்மைகள், அடிப்படைப் பிரிவுகள் என்பவற்றை அறிமுகப்படுத்துவார்.<br>2. வாய்மொழியற்ற தொடர்பாடல் என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>3. தனிநபருக்குள்ளான தொடர்பாடலிலும் நபர்களுக்கிடையிலான தொடர்பாடலிலும் உள்ள பண்புகளை அறிமுகப்படுத்துவார்.<br>4. கூட்டு மற்றும் பொதுமக்கள் தொடர்பாடல் என்பவற்றை ஒப்பிட்டு விளக்குவார்.<br>5. மக்கள் தொடர்பாடலின் முக்கியத்துவம், விசேட தன்மை என்பன ஏனைய தொடர்பாடல் வகைகளுடன் வேறுபடும் விதத்தை விளக்குவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.4 மக்கள் தொடர்பாடலின் பரவல் வெகுஜன ஊடகமென்பதை அறிந்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் வரலாற்று முக்கியத்துவமிக்க வளர்ச்சி பற்றிய விளக்கத்தைப் பெறுவார். | **3.4 வெகுஜன தொடர்பாடலும் ஊடகப் பிரயோகமும்**<br>1. வெகுஜன ஊடகங்களை அறிந்து கொள்ளல்<br>2. வெகுஜன ஊடகப் பிரிவுகளும் அவற்றின் தனித்துவ தன்மைகளும்<br>3. வெகுஜன ஊடகங்களும் சமூகத் தாக்கங்களும்<br>4. வெகுஜன ஊடகங்களும் வரவேற்புத் தன்மைகளும் | 1. வெகுஜன ஊடகம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>2. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் வரலாற்று முக்கியத்துவமிக்க வளர்ச்சி பற்றி விபரங்களுடன் கூடிய தகவல்களை முன்வைப்பார்.<br>3. வெகுஜன ஊடகங்கள் மூலம் சமூகத்திற்கு ஏற்படுகின்ற பிரதான சமூகத் தாக்கங்களைக் காட்டித் தருவார்.<br>4. வெகுஜன ஊடகங்களுக்கும் மற்றும் பெறுநர்களுக்கு மிடையிலான இடைத் தொடர்பை விளக்குவார்.<br>5. பல்வேறு பெறுநர்த் தன்மைகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் விளக்குவார். | 12<br><br>**52** |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **4.0** மானிட கலாச்சாரத்தின் மிகச் சிறந்த ஆக்கத்தையும் கலாச்சாரத்தையும் வெளியிடும் பிரதான ஊடகம் மொழி என்பதை அறிந்து, அது தொடர்பாடலுக்கு உதவுகின்ற விதம் பற்றித் தெளிவான விளக்கத்தைப் பெறுவார். | **4.1** கலாச்சாரம், மொழி, தொடர்பாடல் என்பவற்றிற்கிடையில் காணப்படுகின்ற தொடர்பையும் மொழியின் தனிப் பண்புகளையும் விபரிப்பார். | **4.0 மொழி, தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வியறிவு**<br><br>4.1 **மனித தொடர்பாடலும் மொழியும்**<br>1. கலாச்சாரம், மொழி மற்றும் தொடர்பாடல்<br>2. மொழியும் அதன் தனித்துவத் தன்மையும் பற்றிய கற்கை<br>3. மொழியுடனான செயல் பகுப்பாய்வு<br>4. மொழி நடைமுறைகளும் சமகால போக்குகளும் | 1. கலாச்சாரம், மொழி மற்றும் தொடர்பாடல் என்பவற்றிற்கிடையில் காணப்படுகின்ற இடைத்தொடர்பை இனங்காண்பார்.<br>2. மானிட மொழியின் தனித்துவத்தை மேலோங்கச் செய்யும் பண்புகளைத் தெளிவு படுத்துவார்.<br>3. மொழிவாரியான செயல்களைப் பகுப்பாய்வார்.<br>4. மொழி நடைமுறைகளும் சமகால போக்குகளும் பற்றி உதாரணங்களுடன் விளக்குவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **4.2** வெகுஜன ஊடக மைய மொழியின் சிறப்பம்சங்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் மொழிப் பயன்பாடு என்பவை பற்றி அறிந்து அதனைப் பயனுள்ளவாறு பயன்படுத்தும் ஆற்றலை வெளிப்படுத்துவார். | **4.2 வெகுஜன ஊடகங்களும் மொழியும்**<br>1. வெகுஜன ஊடக அடிப்படை மொழி<br>2. தகவல் மொழியும் ஆக்கத்திறன் மொழியும்<br>3. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக மொழிப் பிரயோகம்<br>4. ஊடக மொழி:உற்பத்தித் திறனும் வரையறையும் | 1. வெகுஜன ஊடக மைய மொழியின் சிறப்பம்சங்களை இனங்காண்பார்.<br>2. தகவல் மொழி, ஆக்கத்திறன் மொழி வேறுபாடுகள், பண்புகள் என்பவற்றினை ஒப்பிட்டுக் காட்டுவார்.<br>3. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக மொழிகள் பயன்படும் விதங்களை ஆராய்வார்.<br>4. ஊடக மொழியைப் பயனுள்ளவாறு பயன்படுத்தப்பட வேண்டிய விதத்தை விளக்குவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **4.3** கல்வியறிவு, ஊடகக் கல்வியறிவு ஆகியவற்றைக் கருத்து ரீதியில் இனங்கண்டு, அவற்றின் காலத்தின் தேவை, பொருத்தப்பாடு, தாக்கங்கள் என்பவற்றை விபரிப்பார். | **4.3 மொழி, கல்வியறிவு மற்றும் ஊடகக் கல்வியறிவு**<br>1. கல்வியறிவும் மொழியும்<br>2. ஊடகக் கல்வியறிவை அறிந்து கொள்ளல்<br>3. ஊடகக் கல்வியறிவு: தேவையும் பொருத்தப்பாடும்<br>4. ஊடகக் கல்வியறிவு: தாக்கங்கள், சாதக தன்மைகள் மொழி சார்ந்த ஆற்றல்கள் | 1. கல்வியறிவு, மொழி என்பவற்றைக் கருத்து ரீதியில் அறிந்து கொள்வார்.<br>2. ஊடகக் கல்வியறிவு என்பதை வரையறுப்பார்.<br>3. ஊடகக் கல்வியறிவின் காலத்து முக்கியத்துவம், அதன் பொருத்தப்பாடு என்பவற்றைத் தெளிவு படுத்துவார்.<br>4. ஊடகக் கல்வியறிவின் மொழிவாரியான சாத்தியத்தையும் தாக்கங்களையும் பெயரிடுவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **4.4** ஊடகக் கல்வியறிவின் அடிப்படை அம்சங்கள், முக்கியத்துவம், தகவல் தொடர்பாடல் ஆகியவற்றை விபரிப்பார். | **4.4 ஊடகக் கல்வியறிவுக் கற்கை**<br>1. ஊடகக் கற்கைஅடிப்படை அம்சங்கள்<br>2. ஊடகக் கல்வியறிவும் தகவல் தொடர்பாடலும்<br>3. ஊடகக் கல்வியறிவுக் கற்கை: செவிப்புல கட்புல அணுகல்கள்<br>4. செய்தி பெற்றுக்கொள்ளலும் பகுப்பாய்தலும் | 1. ஊடகக் கற்கை அடிப்படை அம்சங்களை இனங்காண்பார்.<br>2. தகவல் தொடர்பாடலிற்கு ஊடகக் கல்வியறிவு முக்கியத்துவம் பெறும் விதத்தைத் தெளிவு படுத்துவார்.<br>3. ஊடகக் கல்வியறிவு, தகவல் தொடர்பாடல் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பை விபரிப்பார்.<br>4. ஊடகக் கல்வியறிவுக் கற்கையில் செவிப்புல கட்புல அணுகல்களை ஒப்பிட்டு விளக்குவார்.<br>5. செய்தி பெற்றுக்கொள்ளலும், பகுப்பாய்தலும் பற்றி அறிமுகப்படுத்துவார். | 15<br><br>**52** |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 கலாச்சாரம், மக்கள் கருத்து, அரசியல் என்பவற்றின் மீது வெகுஜன ஊடகத்தின் தொடர்பும், தொடர்பாடல் முகாமைத்துவமும் பற்றிய புரிந்துணர்வுடன் தேசிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தொடர்பாடல் பயன்படுகின்ற விதத்தை அடையாளம் காண்பார். | **5.1** கலாச்சார மாற்றத்திற்குத் தற்கால முக்கிய காரணியாகத் தொடர்பாடலை இனங்காண்பார். | **5.0 வெகுஜன ஊடகங்களும் சமூக கண்ணோட்டமும்**<br><br>5.1 **வெகுஜன ஊடகங்களும் கலாச்சார வழக்கங்களும்**<br>1. வெகுஜன ஊடக கலாச்சாரத்தை அறிந்து கொள்ளல்<br>2. வெகுஜன ஊடக அடிப்படைக் கலாச்சார மாற்றம்<br>3. வெகுஜன ஊடக கலாச்சாரமும் வாடிக்கையாளர் சமூகமும்<br>4. மனப்பான்மை, உயர்சிந்தனைகள் மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்கள் | 1. வெகுஜன ஊடக மையக் கலாச்சாரத்தை அடையாளம் காண்பார்.<br>2. வெகுஜன ஊடக மையக் கலாச்சாரத்துறையின் மாற்றங்களை விளக்குவார்.<br>3. வெகுஜன ஊடக கலாச்சாரம் மற்றும் நுகர்வோர் சமூகம் என்பவற்றிற்கிடையிலான தொடர்பை விபரிப்பார்.<br>4. மனப்பாங்கு, உயர் இலட்சியம், வாழ்க்கை முறை மாற்றம் என்பவற்றின் மீது தொடர்பாடல் பயன்பட்டிருக்கும் விதத்தை விளக்குவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **5.2** மக்கள் கருத்து, அரசியலைக் கையாளுகையில் தொடர்பாடல் உதவுகின்ற விதம் போன்றவற்றை ஆராய்வார். | 5.2 **மக்கள் கருத்தும் அரசியலும்**<br>1. மக்கள் கருத்தை அறிந்து கொள்ளல்<br>2. வெகுஜன ஊடகம், மக்கள் கருத்து மற்றும் அரசியல்<br>3. மக்கள் கருத்தைக் கட்டியெழுப்பலும் கையாளுதலும்<br>4. வெகுஜன ஊடகமும் ஜனநாயகமும் | 1. மக்கள் கருத்து என்பதை வரையறுப்பார்.<br>2. வெகுஜன ஊடகம், மக்கள் கருத்து மற்றும் அரசியல் ஆகியவற்றிற்கிடையிலான அர்த்தமுள்ள தொடர்பை இனங்காண்பார்.<br>3. மக்கள் கருத்தைக் கட்டியெழுப்புவதற்கும் கையாள்வதற்கும் தொடர்பாடலைப் பயன்படுத்தும் விதத்தை விளக்குவார்.<br>4. ஜனநாயக சமூக வாழ்விற்குத் தொடர்பாடல் துணைபுரியும் விதத்தை விளக்குவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **5.3** அமைப்புரீதியான தொடர்பாடலை கருத்தளவில் இனங்கண்டு தேசிய நோக்கக் காரணிகளில் ஊடகம் பயன் படுத்தப்படும் விதத்தை விபரிப்பார். | 5.3 **அமைப்புரீதியாக செயற்பாடுகளும் ஊடகங்களும்**<br>1. அமைப்புரீதியான தொடர்பாடலை அறிந்து கொள்ளல்<br>2. ஊடக செயற்பாடுகளை திட்டமிடல்<br>3. அரசியல் பிரச்சாரங்களும் தோற்றுருவைக் கட்டியெழுப்பும் செயல்களும்<br>4. தேசிய எதிர்பார்ப்புக்களும் அமைப்பு ரீதியான ஊடக செயல்களும் | 1. அமைப்புரீதியான தொடர்பாடலை இனங்கண்டு அதன் விளக்கத்தை தெளிவு படுத்துவார்.<br>2. ஊடக செயற்பாடுகளை திட்டமிடுதல் பற்றி விபரிப்பார்.<br>3. அரசியல் பிரச்சாரங்கள் மற்றும் தோற்றுருவை அடைதல் போன்றவற்றிற்கு வெகுஜன ஊடகத்தின் முக்கியத்துவத்தை சர்வதேச உதாரணங்களுடன் காட்டுவார்.<br>4. தேசிய எதிர்பார்ப்பு அடைவை யொட்டி ஊடகம் ஒழுங்கமைப்பில் பயன்படுத்தப்பட வேண்டிய விதத்தைத் தெளிவு படுத்துவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | **5.4** மக்கள் தொடர்புகளும் தொடர்பாடலும், தொடர்பாடல் முகாமைத்துவத்தில் காலத்தின் தேவை, முக்கியத்துவம் என்பவற்றை இனங்காண்பார். | 5.4 **மக்கள் தொடர்புகளும் தொடர்பாடல் முகாமைத்துவமும்**<br>1. மக்கள் தொடர்புகள்: கருத்தியல்ரீதியினதும் கோட்பாட்டினதும் பின்னணி<br>2. மக்கள் தொடர்புகளும் தொடர்பாடலும்<br>3. தொடர்பாடல் முகாமைத்துவம்: காலத்தின் தேவையொன்றாக<br>4. மூலோபாயங்களுடனான தொடர்பாடலும் முகாமைத்துவமும் | 1. மக்கள் தொடர்புகள்: கருத்தியல் ரீதியினதும் கோட்பாட்டினதும் பின்னணியை இனங்காண்பார்.<br>2. மக்கள் தொடர்புகளுக்கும் தொடர்பாடலுக்கும் இடையே காணப்படும் இடைத் தொடர்புகளைத் தெளிவு படுத்துவார்.<br>3. தொடர்பாடல் முகாமைத்துவ காலத்தின் தேவை, முக்கியத்துவம் மற்றும் அது பயன்படுத்தப்படும் விதம் என்பவற்றைத் தெளிவுபடுத்துவார்.<br>4. மூலோபாயங்களுடனான தொடர்பாடலானது முகாமைத்துவத்துடன் காணப்படும் இடைத் தொடர்பை விளக்குவார். | 15<br><br>**54** |